செ.வெ.எண்: 182 26/02/2010

001

செய்தி வெளியீடு – 26.2.2010

## "தினமணி", "தினமலர்" நாளிதழ்களில் பணிபுரிந்து மறைந்த இரண்டு பத்திரிகையாளர்கள் குடும்பங்களுக்கு 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நிதியுதவி!

## முதலமைச்சர் கலைஞர் ஆணை!

தமிழகத்தில் பத்திரிகைத் துறையில் பணியாற்றி வருவோரின் நலன் கருதி, அவர்கள் பணியாற்றும் காலத்தில் இறந்துவிடுவார்களேயானால், அவர்களின் குடும்ப நலன்களைப் பாதுகாக்கும் பொருட்டு, 20 ஆண்டுகள் பணிபுரிந்து இருந்தால் அவர்கள் குடும்பத்திற்கு 2 இலட்ச ரூபாயும், 15 ஆண்டுகள் பணிபுரிந்திருந்தால் ஒன்றரை இலட்ச ரூபாயும், 10 ஆண்டுகள் பணிபுரிந்திருந்தால் ஒரு இலட்ச ரூபாயும் பத்திரிகையாளர் குடும்ப நல நிதியுதவியாக முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிதியுதவி வழங்கிடும் புதிய திட்டம், 19.9.2006 முதல் இந்த அரசினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்படி, சென்னை 'தினமலர்' நாளிதழில் உதவி ஆசிரியராக 23 ஆண்டுகள் பணியாற்றி, 20.5.2007 அன்று இயற்கை எய்திய திரு சி.நாகேந்திரப்பிள்ளை என்பவரின் மனைவி திருமதி த.பகவதீஸ்வரி அவர்களுக்கு 2 இலட்சம் ரூபாயும்;

மதுரை 'தினமணி' நாளிதழில் தலைமைச் செய்தியாளராக 19 ஆண்டுகள் பணியாற்றி, 5.4.2009 அன்று இயற்கை எய்திய திரு.வீர.ஜீவா பிரபாகரன் என்பவரின் மனைவி திருமதி இரா.பரமேஸ்வரி அவர்களுக்கு 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயும்;

ஆக மொத்தம், 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பத்திரிகையாளர் குடும்ப நலநிதி உதவியாக வழங்கிட முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

****

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9